Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 241/2020 PW-1**

Name : சகுந்தலா
Father / Husband name : மாணிக்கம்
Village : தேவபண்டலம்
Age : 72
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.11.2025

Witness produced from Salem combind court complex. Both side counsel present.

**முதல் விசாரணை நேரம் 03.40 -**

நான் தற்போது ஓய்வில் உள்ளேன். கடந்த 2019 ம் வருடம் எனது மகன் செழியனை பார்த்துவிட்டு சென்னையிலிருந்து தேவபண்டலத்திற்கு எங்களுக்கு சொந்தமான காரில் நானும் எனது கணவர் மற்றும் ஓட்டுநர் தனசேகர் ஆகியோர்கள் வந்தோம். சென்னை - திருச்சி சாலையில் சாரம் கிராமம் அருகே உள்ள ரெட்டியார் ரைஸ்மில் அருகே பகல் 12 மணியளவில் வரும்போது எங்கள் வாகனத்திற்கு முன்னால் வந்த லாரி வேகமாக வந்து எங்கள் காரின்மீது மோதியது. மேற்படி லாரியின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. விபத்தில் எனது கணவருக்கு காரில் இருந்த கண்ணாடி உடைந்து கழுத்தில் குத்திவிட்டது. ஓட்டுநருக்கு காலில் அடிப்பட்டது. எனக்கு உடல்முழுவதும் அடிப்பட்டது. பின்னர் அடிப்பட்ட எங்களை அங்கு பக்கத்திலிருந்தவர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனது கணவர் இறந்துவிட்டதாக மருத்துவர் பரிசோதித்துவிட்டு கூறினார். காரின் ஓட்டுநர் உள்நோயாளியாக மருத்துவமனையில் இருந்தார். நான் சிகிச்சை பெற்றுக்கொண்டு ஒலக்கூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.நான் லாரி டிரைவரை கவனிக்கவில்லை. விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் ஐந்து வருடம் ஆனதால் தற்போது நினைவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள

கையொப்பம் என்னுடையது. அதனை நான் தான் ஒலக்கூர் காவல் நியைத்தில் கொடுத்தேன். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த விபத்தில் எனக்கு கழுத்து, கை, கால், முதுகு, வயிற்றி பகுதியில் அடிப்பட்டது. நான் கள்ளக்குறிச்சியில் சஞ்சீவி தனியார்மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் சாட்சியின் வயது 72 மற்றும் காணொளி மூலம் சேலத்திலிருந்து ஆஜராகி சாட்சியம் அளிப்பதால் குறுக்கு விசாரணை செய்யக்கோரியும், குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**